


# 4 நீர்வளநாகரிகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

***இந்த அலகின் மூலம் நீர் வள நாகரிகத்தின் ஆரம்பத்தில் நீர்ப்பாசன தொழினுட்பம், நிர்வாகக் கட்டமைப்பு, பொருளாதார முறை, வெளிநாட்டுத் தொடர்புகள், கலாசாரம் என்னும் அம்சங்களின் வளர்ச்சியின் இயல்பு மற்றும் நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி என்பன பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்***

இலங்கை நாகரிகம் நீர் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமாகி வளர்ச்சியடைந்தமையால் நீர்வள நாகரிகம் எனப்படுகின்றது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஆரியர்களாலே இந்நாகரிகம் உருவானது என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். அவர்கள் நதிக்கரைகளில் தமது குடியேற்றங்களை அமைத்துக் கொண்டதுடன் நதியின் நீரைப்பெற்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் விவசாய நடவடிக்கைகளுக்காக நீரைச் சேமித்து வைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே நீர்ப்பாசன அமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் முன்வந்தனர்.

**நீர்ப்பாசன முறையொன்றின் தேவைக்கான காரணங்கள்**

★ மக்களின் பிரதான சீவனோபாயமாக நெற்செய்கை விளங்கியமை.
★ ஆற்று நீர் நெற்செய்கைக்குப் போதாமை
★ மழை வீழ்ச்சி வருடத்தில் பருவகாலங்களில் மாத்திரம் கிடைத்தமை
★ கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சி போதியதாக இன்மை.
★ சனத்தொகை அதிகரிப்பினால் விவசாய நிலங்கள் விஸ்தரிக்கப்பட்டமை.



**நீர்ப்பாசனத் தொகுதியொன்றின் தோற்றத்திற்கு வித்திட்ட பௌதிகக் காரணிகள்**

★ உலர் வலயத்திற்கு பொருத்தமான புவியியல் அமைப்பு காணப்பட்டமை.
  - ♦ **தொடரலை வடிவிலான நில அமைப்பு**
  - ♦ **அதனூடே ஓடும் ஆறுகள் காணப்பட்டமை**

★ உலர்வலயச் சமவெளியின் நிலச்சரிவுக்கேற்ப கால்வாய்களை நிர்மாணிக்க முடிந்தமை

★ சமவெளியூடாக ஆறுகள் பாயும் போது பின்னிய ஆறுகள், மியாந்தர் வளைவுகள் என்பன தோன்றுவதால் ஆற்றின் வேகம் குறைவடைந்து காணப்பட்டமை. (இது சிற்றணைக்கட்டுகளை அமைப்பதற்கும் ஏதுவாக அமைந்தது.)

★ எச்சக் குன்றுகளும் அதனோடு இணைந்த சுவடுகளும் காணப்பட்டமை. (குளக்கட்டை நிர்மாணிக்க ஏதுவாயமைந்தது)

## நீர்ப்பாசன அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும்.

| நிர்மாணப் பணியில் ஈடுபட்டோர் | நீர்ப்பாசன அமைப்பு | வளர்ச்சியின் இயல்பு |
|---|---|---|
| கிராமத் தலைவர்கள் (பறுகம) | சிறிய குளங்களை அமைத்தல் (கிராமக் குளங்கள்) | கிராமத்தில் உள்ள குடும்பங்களுக்கு மாத்திரம் விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமானது. |
| பண்டுகாபய மன்னன் | அபயவாவி, (பவசக்குளம்), ஜயவாவி, காமினி வாவி | அரச அனுசரணை கிடைத்தமை. (அபய வாவி மட்டுமே தற்போது கண்டறியப்பட்டுள்ளது). |
| தேவநம்பியதீச மன்னன். | திசா வாவி | அரச அனுசரணை கிடைத்தமை. |
| சத்தா திஸ்ஸ மன்னன் | 18 குளங்களை அமைத்ததாக வம்சக் கதைகள் குறிப்பிடுகின்றன. | |
| வசப மன்னன் | 11 குளங்களையும் 12 கால்வாய்களையும் அமைத்தமை. உ-ம் :- மகாவிலச்சிய, மனாகட்டிய குளங்கள், எலஹர கால்வாய்கள் | பாரிய குளங்கள் நிர்மாணிப்பின் ஆரம்பம், சுரங்கவழி நீர்ப்பாசனத்தை அமைத்தல், கால்வாய்களின் மூலம் குளங்களுக்கு நீர் வழங்கல். |
| மகாசேன மன்னன் | 16 குளங்களை அமைத்தமை. எலஹர கால்வாயை விஸ்தரித்தமை. உ-ம்:- மின்னேரியா குளம், குருளு வாவி, மகாகண தரா வாவி. | எலஹர, மின்னேரியா, கவுடுளு எனும் ஒன்றிணைந்த நீர்ப்பாசன அமைப்பின் உருவாக்கம். |

| | | |
|---|---|---|
| தாதுசேன மன்னன் | 18 குளங்களையும், ஒரு கால்வாயையும் அமைத்தமை. உ-ம் கலாவாவி, மாததுகம குளம், மெத்த கட்டிய வாவி மற்றும் யோத கால்வாய் (ஜயகங்கை) | ஜயகங்கை கால்வாய் மூலம் கலாவாவி நீரை அனுராதபுரத்தில் அமைந்த குளங்களுக்கு வழங்கியமை. சில குளங்களை இணைத்துப் பாரிய குளங்களை உருவாக்கியமை. |
| இரண்டாம் முகலன் | பதவியா குளம், பத்பஹுன் குளம் (நாச்சியா தீவுக் குளம்) | பாரிய குளங்கள் நிர்மாணித்தல். |
| முதலாம் அக்போ மன்னன் | சிறிவட்டமானக வாவி, குறுந்துவாவி என்பவற்றுடன் மினிப்பே அணையும் கால்வாயும் | நீர்ப்பாசன அமைப்பின் சிறந்த நிர்மாணமான மினிப்பே அணை, கால்வாய் என்பன உருவாதல். |
| இரண்டாம் அக்போ மன்னன் | கந்தளாய்க்குளம், கிரித்தலவாவி | கந்தளாய்க்குளம் பாரிய நீர்த் தேக்கமாக அமைதல். |
| முதலாம் விஜயபாகு மன்னன் | எலஹுர கால்வாய், மஹா கல்கடவல வாவி, மஹா கணதரா வாவி, பத்பஹுன் குளம் என்பவற்றை புனர் நிர்மாணித்தல் | அனுராதபுர யுகத்தின் இறுதியில் சிதைவடைந்து போன நீர்ப் பாசன அமைப்புகளைப் புனர் நிர்மாணம் செய்தல். |
| முதலாம் பராக்கிரமபாகு மன்னன் | அரசனாவதற்கு முன்னரே தெதுறு ஓயாவின் குறுக்கே அணைகட்டியமை, பண்டாவாவியை விஸ்தரித்தமை அரசனான பின்னர் பராக்கிரம சமுத்திரம் எனும் குளத்தையும் அங்கமடில்ல (ஆகாய கங்கை) எனும் கால் வாயையும் அமைத்தமை. | சிறிய குளங்களை இணைத்து பாரிய குளங்களை உருவாக்குதல். அனுராதபுர, பொலன்னறுவை காலத்தின் நீர் பாசனத்துறை வளர்ச்சியின் உச்சக்கட்டம், நீர்ப்பாசனத்துறை வரலாற்றின் பொற்காலம். |
| நிஸங்கமல்ல மன்னன் | நிஸ்ஸங்க சமுத்திரம் எனும் குளத்தை நிர்மாணித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. | |

**செயற்பாடு :**

★ *அனுராதபுர யுகத்திலும் பொலன்னறுவை யுகத்திலும் நிர்மாணிக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள், அணைகள் பற்றி அறிக்கையொன்று தயாரிக்க.*


★ *நீர்வள நாகரிகத்தின் நீர்ப்பாசன அமைப்பை இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுக.*

## நீர்வள நாகரிகத்தில் நீர்ப்பாசனத்துறை குளங்களும் கால்வாய்களும்.

பாய்ந்தோடும் ஓடையை அல்லது நதியை மறித்து அணைக்கட்டொன்றைக் கட்டுவதன் மூலம் குளம் உருவாக்கப்பட்டது. குளத்திற்கான நேரடி நீரேந்து பிரதேசம் தவிர்ந்த, வெளிவாரியான பகுதிகளிலிருந்தும் நீரைப் பெற்றுக்கொண்ட


சந்தர்ப்பங்களையும் காண முடிகின்றது. குளம் அமைந்துள்ள பகுதிக்கு சமீபமாக அமைந்திருந்த ஓடை அல்லது நதியின் மூலமும் குளத்துக்கான நீர் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்கள் பலவற்றை புராதன நீர்ப்பாசனத் துறையில் நாம் அவதானிக்கலாம்.

மாகல்ல வாவி - தெதுறு ஓயாவின் ரிதிபெந்தி கால்வாய் மூலம் நீரைப் பெற்றுக்கொண்டது.
தப்போ வாவி - மீஓயாவின் மூலம் நீரைப் பெற்றுக்கொண்டது.
பராக்கிரம சமுத்திரம் - அம்பன் கங்கை மூலம் நீரைப் பெற்றுக் கொண்டது.



*தேசப்படம் 4.1 புராதன இராசரட்டையின் நீர்ப்பாசனக் கட்டமைவு*

ஆற்றின் பொருத்தமான இடத்தில் உயரம் குறைவான சிற்றணைகளைக் கட்டி, ஆற்றின் போக்கை இயல்பாக விட்டு ஒரு சிறு திசை திருப்பம் மூலம் கால்வாய் ஊடாக நீரைத் தேவையான இடத்திற்குக் கொண்டு செல்லல் மற்றுமொரு முறையாகக் காணப்பட்டது.




*உரு 4.1 குளத்தின் பிரதான கூறுகள்.*

உதாரணம்

★ அம்பன் கங்கைக்குக் குறுக்காக அங்கமடில்ல எனுமிடத்தில் அணைகட்டி ஆகாச கங்கை என்ற கால்வாய் மூலம் பாராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் வழங்கப்பட்டமை.

★ எலஹர எனுமிடத்தில் அம்பன் கங்கைக்கு குறுக்கே அணை கட்டி எலஹர கால்வாய் மூலம் கவுடுளு, மின்னேரியா, கந்தளாய் எனும் குளங்களுக்கு நீர் வழங்கப்பட்டமை.

★ மகாவலி கங்கைக்கு குறுக்காக மினிப்பே எனுமிடத்தில் அமைக்கப்பட்ட அணையின் மூலம் மினிப்பே கால்வாய் ஊடாக மேட்டு நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்பட்டமை.



*உரு 4.2 குளக்கட்டு குவாட்சைட் பாறைகளின் மேல் அமைக்கப்படுதல்.*

பிரதான குளத்தில் சேறும் வண்டலும் சேர்வதைத் தடுக்கும் முகமாக சிறிய குளங்களை அமைத்தலும் அதற்கான ஒரு கால்வாயை அமைத்தலும் புராதன நீர்ப்பாசன தொழினுட்பத்தின் மற்றுமொரு பண்பாகும். கால்வாய்களை அமைக்கும் போது சிறு குளங்களின் மூலம் நீரை வழிந்தோடச்செய்தல் இதன் சிறப்பம்சமாகும். இதனால் பிரதான குளத்தில் சேறு படிவது தவிர்க்கப்படும்.

உதாரணமாக எலஹர கால்வாய் மூலம் மின்னேரிய மற்றும் கிரித்தல குளங்களுக்கு நீர் வழங்கும் செயற்பாட்டின் போது சிறு குளங்களுக்கு ஊடாகவும் கால்வாய்கள் அமைக்கப்பட்டன.

★ ஒரு குளத்திலிருந்து மற்றொரு குளத்துக்கு நீரை வழங்குவதற்கும் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணம்: கலா வாவியிலிருந்து ஜயகங்கை கால்வாய் மூலம் திசாவாவிக்கு நீர் கொண்டு செல்லப்பட்டமை.

★ குளத்து நீரைப்பெற்று செய்கை பண்ணக்கூடிய வயல்நிலங்களுக்கு நீரைக்கொண்டு செல்வதற்கும் கால்வாய்கள் அமைக்கப்பட்டன. இக்கால்வாய்கள் மூலம் நீர் வயலுக்கு பாய்ச்சப்பட்டது. வயலிலிருந்து வெளியேற்றப்பட்ட கழியோடை நீரானது மீண்டும் பிரதான கால்வாயை அடையும் வண்ணம் கால்வாய்த் தொகுதி அமைக்கப்பட்டிருந்தது. கால்வாய்கள் அனைத்தும் போல நிலத்தின் சாய்வைப் பயன்படுத்தி சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## நீர்ப்பாசனத் தொழினுட்பம்

### (1) குளக்கட்டு

குளம் ஒன்றின் முக்கியமான பகுதி குளக்கட்டாகும். பாய்ந்தோடும் நீரை குறுக்கே மறித்துக் குளக்கட்டை அமைப்பதற்கு இரு எச்சக்குன்றுகளின் பாறைச் சுவடுகளைப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது.

மேலும் குளத்து நீர் தேங்கிநிற்கும் மேட்டு நிலத்தின் பாறை அமைப்பு பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமையும் அறியக்கூடியதாகவுள்ளது.

உதாரணமாக :- மின்னேரியாக் குளத்தின் குளக்கட்டானது குவாட்சைட் பாறை பரந்துள்ள அமைப்பிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குளக்கட்டு அமைக்கப்பட்ட பாறைத் தொடரானது குளத்தின் கீழ்ப்பகுதியிலும் பரந்துள்ளவாறான நிலையிலேயே குளக்கட்டின் அமைப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வமைப்பானது குளத்துநீர் கசிந்து செல்லாது பாதுகாத்துள்ளது.


சமவுயரக் கோடுகளின் பரவலுக்கு ஏற்பவும் குளக்கட்டுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
உ-ம்:- பராக்கிரம சமுத்திரத்தின் குளக்கட்டு

எச்சக் குன்றுகளோ பாறைத் தொடர்களோ இல்லாதவிடத்தில் நிலத்தின் அமைப்புக்கேற்ப குளக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

உ-ம்:- மன்னார் மாவட்டத்தில் உள்ள இராட்சதக் குளத்தின் குளக்கட்டானது ஏழு (7) மைல் நீளத்தில் அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளமை.

### (2) அலைதாங்கி :-

மண்ணினால் அமைக்கப்பட்ட குளக்கட்டானது நீரினால் அரிக்கப்படாமல் இருப்பதற்காக குளக்கட்டின் உட்புறத்தே கருங்கற்களைப் பரவி அமைக்கப்படுவது அலைதாங்கியாகும். இதன் மூலம் குளத்தில் எழும் நீரலையினால் குளக்கட்டு அரிப்பெடுக்காமல் பாதுகாக்கப்பட்டது.



*உரு 4.3 பாறை அமைப்பு*

### (3) கலிங்கல் (மடைக்கதவு):-

குளத்து நீரை வயலுக்கு வழங்குவதற்காக, கால்வாய்க்கு நீரைத் திறந்து விடுவதற்காகவே கலிங்கல் (மடைக்கதவு) அமைக்கப்பட்டது. புராதன குளங்களில் இது மிகவும் நுணுக்கமான முறையில் நீர் கசியா வண்ணம் கருங்கல்லினாலே அமைக்கப் பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

குளத்து நீரின் வேகத்தால் கால்வாய் அரித்துச் செல்லப்படுவதை தடுக்குமுகமாக கலிங்கலின் குளத்தின் துவாரம் சிறியதாகவும் கால்வாய்ப் பக்கமான துவாரம் பெரிதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.



*உரு 4.4 கலிங்கல் (மடைக்கதவு)*

ஈரக்கலிங்கல், உயர்கலிங்கல் என மடைக்கதவு இருவகைப்படும். அதாவது குளத்தில் நீர்மட்டம் கூடியிருக்கும் போது கால்வாய்க்கு நீரை விநியோகிப்பதற்கு ஏதுவான வகையில் நீரின் மேல் மட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் துவாரம் உயர் கலிங்கல் எனப்படும். குளத்தின் நீர்மட்டம் குறைந்திருக்கும் போது நீரை விநியோகிப்பதற்கும், குளத்தில் சேரும் சேற்றை அகற்றுவதற்கும் குளக்கட்டின் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வாயில் ஈரக்கலிங்கல் எனப்படும்.

#### 4) கலிங்கல் தொட்டி:-

பாரியதொரு குளத்திலிருந்து குளக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு நீரை வழங்கும் போது குளக்கட்டைப் பாதுகாக்கும் வகையில் கலிங்கல் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. சதுர வடிவிலான கிணறு ஒன்றின் வடிவில் அமைக்கப்பட்டுள்ள கலிங்கல்தொட்டி என்பது இலங்கைக்கு நீர்ப்பாசன தொழினுட்பத்தின் உயர் தரமான நிர்மாணமாகும். தேவையான நேரத்தில், தேவையானளவு நீரைக் கால்வாய்க்கு வழங்குவதற்குரிய நீர்க்கட்டுப்பாட்டு உபகரணமொன்று கலிங்கல்தொட்டியினுள் உள்ளது. இது ‘மொஹல’ என அழைக்கப்படும். கருங்கற்களை மிகவும் நுணுக்கமான வகையில் இணைத்து நீர் கசியா வண்ணம் இது அமைக்கப்பட்டுள்ளது.



*உரு 4.5 கலிங்கல் தொட்டி*

#### (5) வான் கதவு

மழைக்காலத்தில் சேரும் குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட உறுதியான நிர்மாணமாக இதனைக் கூறலாம். பெரும்பாலும் குளக்கட்டின் அந்தத்தில் குளக்கட்டின் உயரத்தை விட தாழ்வான உயரத்தில், கருங்கற் பாறையைக் கொண்ட இடத்தில் சுருங்கை அமைக்கப்பட்டிருக்கும். மேலதிக நீர் இதனூடாக வெளியேற்றப்படுவதனால் குளக்கட்டானது உடைப்பெடுக்காமல் பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாறு வெளியேற்றப்படும் நீரானது வயல் நிலங்களை மூழ்கடித்து விடாமல் பிரதான நதியைச் சேரும் வகையில் அல்லது வேறு குளங்களைச் சென்றடையும் வகையில் கால்வாய் வெட்டப்பட்டிருக்கும்.

#### (6) உள்வான் கதவு

மேலதிக நீரை குளமொன்றுக்குக் கொண்டுவரும் போது, உள் வான் கதவு திறக்கப்படும். இது வான்கதவைப் போன்றதொரு உறுதியான தீர்மானமல்ல. தண்ணீர் பிரவாகத்தினோடு வரும் வண்டலும் சேறும் குளத்தில் படிவதை உள்வரும் வான் கதவு தடுக்கும். இதனூடாக குளத்துக்குக் கொண்டு வரப்படும் மேலதிக நீரை நிறுத்திய பின்னர் உள்வரும் வான்கதவுக்கு வெளியே சேர்ந்துள்ள சேற்றை அகற்ற முடியும்.

**(7) உயர் அணை (போட்டா அணை)**

குளம் ஆரம்பிக்கும் இடத்தில் மேட்டு நிலத்தினதும், மலைக்குன்றுகளினதும் அடிவாரத்தின் நெடுகிலும் இரண்டு(2) அல்லது மூன்று (3) அடி உயரத்துக்கு மண்ணால் அமைக்கப்படுவது உயர் அணை அல்லது போட்டா அணை எனப்படும். இதன் மூலம் குளத்தில் சேரும் வண்டலும், சேறும் தடுக்கப்படும். அத்துடன் மேட்டு நிலத்தின் அடிவாரத்தை ஈரமாக வைத்திருக்கவும் முடிகிறது. எனவே மரங்கள் செழித்து வளர்வதற்கு ஏற்ற சூழல் ஒன்று இங்கு உருவாகின்றது.

**(8) கலிங்கற்கட்டு**

குளத்தின் வான்கதவுக்கு முன்னால், குளத்தினுள்ளே குளக்கட்டுக்கு நேராக குளத்தின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் உயரம் குறைவான கருங்கல்லால் கட்டப்படும் அணையே கலிங்கற்கட்டு எனப்படுகின்றது. இது வான் கதவு மட்டத்தைவிடத் தாழ்வாக அமைக்கப்பட்டிருக்கும். குளத்தின் நீர்மட்டம் கூடியிருக்கும் போது இது நீரினுள் மூழ்கிக் காணப்படும். வான் கதவு உடைப்பெடுக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் குளத்துநீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தலே கலிங்கற் கட்டு அமைக்கப்படுவதன் நோக்கமாகும். இது போன்றதொரு அணை பராக்கிரம சமுத்திரத்தில் காணப்படுகின்றது.

**(9) நீரேந்து பிரதேசம்:-**

குளத்தின் நீர்மட்டம் உச்ச அளவில் பரந்து காணப்படும். குளத்தைச் சூழ அமைந்துள்ள பகுதியே நீரேந்து பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் குளிர்மையான தாவரங்கள் பரவலாகக் காணப்படும். பல்வேறு புல்லினங்களும், மருதம், புங்கை, இலுப்பை முதலிய மரங்களும் செழித்து வளர்ந்திருக்கும். எனவே இங்கு காட்டு விலங்குகளும் கூட்டம் கூட்டமாகக் காணப்படும்.

**(10) சிறு குளங்கள்:-**



*உரு 4.6 சிறு குளங்கள்:*

மலைச் சரிவுகளிலிருந்து ஊற்றெடுக்கும் பிரதான நதியின் கிளையாறுகளுக்குக் குறுக்காக அமைக்கப்படும் சிறிய அணைக்கட்டுகள் மூலம் சிறு குளங்கள் உருவாகும். இவற்றுக்கு கலிங்கல் (வான்கதவு) இருக்காது. கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட சிறு இடைவெளி மூலம் பிரதான குளத்துக்கு நீர் வழங்கப்படும்.சிறு குளங்களில் சேறும் வண்டலும் படிவதால் பிரதான குளத்தில் அவை சேர்வது தடுக்கப்படுகிறது. மழைக்காலங்களில் பிரதான குளத்தில் மேலதிக நீர் சேர்வதையும் இச் சிறு குளங்கள் தடுக்கின்றன. இங்கு நீர் சேமித்து வைக்கப்படுவதனால் குளத்தின் மேல் பகுதியில் மரங்கள் செழித்து வளர்வதுடன் ஊற்றுநீரும் அதிகரிக்கின்றது. அத்துடன் பிரதான குளத்தில் நீர் குறைவடையும் போது சிறுகுளங்களில் சேமிக்கப்பட்ட நீர் பிரதான குளத்துக்கு வழங்கப்படும்.



இலவச விநியோகத்திற்காக

**கால்வாய்களுடன் தொடர்பான தொழினுட்பம்:**

மிகவும் சாய்வான ஒரு பிரதேசத்தினூடாக கால்வாயை அமைக்கும் போது நீரின் வேகத்தைக் குறைப்பதற்காக கருங்கல்லினால் அத்திவாரம் அமைத்தல் மற்றும் சிறிய கற்றூண்களை கால்வாயின் உள் பகுதிகளில் இடையிடையே பொருத்துதல்.
உ-ம் : எலஹர அணையிலிருந்து மின்னேரியா குளத்துக்கு நீரைக்கொண்டு செல்லும் எலஹர கால்வாய்.

- ★ கால்வாயின் நீரினளவு கூடும் சந்தர்ப்பங்களில் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக கருங்கல்லினால் வான் கதவை அமைத்தல்.
- ★ நிலத்தின் சரிவைப் பயன்படுத்தி நீளமான கால்வாய்களை நிர்மாணித்தல்.
- ★ சுரங்கவழி நீர்ப்பாசன தொழினுட்பம்:- குழாய்கள் மூலம் குளத்து நீரை பொய்கை, பூங்கா என்பவற்றுக்கு விநியோகித்தல்.
  உ-ம் :- திசாவாவி நீரை ரன்மசு உயன பூங்காவிற்கும் குட்டம் பொய்கைக்கும் விநியோகித்தமை.
- ★ கால்வாயில் நுட்பமான சாய்வைக் கையாண்டு நீண்ட தூரத்துக்கு நீரைக்கொண்டு செல்லல்.
  உ-ம்:- கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு நீரைக்கொண்டு செல்லும் ஜயகங்கைக் கால்வாய் ஒரு கிலோ மீற்றருக்கு 95 மில்லி மீற்றர் சாய்வைக் கொண்டது.
- ★ கால்வாய்களை நிர்மாணிக்கும் பணியில் நிலத்தை அகழும் சந்தர்ப்பங்களில் நீரை உறிஞ்சும் தன்மை, கால்வாய் கட்டுக்களை உறுதியாகப் பேணல், வெள்ளப்பெருக்கின் போது மண்ணரிப்பைத் தடுத்தல் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.
- ★ உலர்வலயம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கால்வாய்கள் அமைக்கப்பட்டமை.
- ★ ஆறுகள் பின்னிச் செல்லும் போது ஆற்றின் வேகம் குறைகின்றது என்பதை அறிந்திருந்த நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவ்விடத்தில் தடையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் மேலெழும் நீரை கால்வாய் மூலம் தாழ் நிலத்திற்குக் கொண்டு செல்லல்.

**செயற்பாடு :**

- ★ *குளம் மற்றும் கால்வாய் நிர்மாணத்தின் போது பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப அம்சங்களை உள்ளடக்கி குளமொன்றின் மாதிரியை அமைக்க.*

## நிர்வாக கட்டமைப்பு :-

- நிர்வாகம்
  - மத்திய நிர்வாகம்
  - பிரதேச நிர்வாகம்
  - கிராம நிர்வாகம்

## மத்திய நிர்வாகம்:-

மத்திய நிர்வாகம் என்பது நாட்டின் அரசனாலே மேற்கொள்ளப்பட்டது. அரச உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக முடிசூட்டு விழா நடாத்தப்பட்டது. தனது அரச வம்சத்துக்குப் பொருத்தமான பட்டத்து இராணியுடன் நாட்டு மக்களின் முன்னிலையிலேயே முடிசூட்டு விழா நிகழ்த்தப்பட்டது. மௌரிய அரச வம்ச மரபுப்படி இலங்கையில் தேவநம்பிய தீச மன்னனால் முதலாவது முடிசூட்டு விழா நடாத்தப்பட்டது. மேலும் மன்னனால் நாட்டு மக்களுக்காற்றப்படவேண்டிய பணிகள் பற்றி மூலாதாரங்களில் காணப்படுகின்றன.

★ நாட்டு மக்களைப் பாதுகாத்தல்
★ விவசாயத்துக்குத் தேவையான நீரைப் பெற்றுத் தருதல்
★ பௌத்த சமயத்தையும் கலாசாரத்தையும் பாதுகாத்தலும் வளர்த்தலும்.

அரசன், தனது ஆட்சி நடவடிக்கைகளின் போது பௌத்த குருமாரினதும் புரோகிதர், சேனாதிபதி, அமைச்சர்களினதும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டான். பௌத்த சமயத்துக்கேற்ப பத்து அரச தர்மங்களைக் கவனத்திற் கொண்டு ஆட்சி செய்தல் அரசனின் கடமையாகும்.

அனுராதபுரக்காலத்தில் சில சந்தர்ப்பங்களின் போது மன்னன் போதி சத்துவராக மதிக்கப்பட்டதுடன் பொலன்னறுவைக் காலத்தின் போது மனித வடிவிலிருக்கும் தெய்வமாக மன்னன் மதிக்கப்பட்டதற்கான சந்தர்ப்பங்களைக் காண முடிகின்றது.

அரச உரிமையானது சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு அல்லது தந்தையிடமிருந்து மகனுக்கு உரியதாயிருந்தது.கடைசிச் சகோதரனின் பின்னர் ஆட்சியுரிமையானது மூத்த சகோதரனின் மகனுக்கு உரித்தானது. மன்னன் இராசரட்டையை தனது ஆட்சி மத்திய நிலையமாகக் கொண்டிருந்த அதே வேளை மாயாரட்டையில் (தக்கிண தேசத்தில்) ‘மாபா’ என்று பதவி அரசனின் தம்பிக்கும், உருகுணரட்டையில் ‘ஏபா’ எனும் பதவி மன்னனின் மகனுக்கும் வழங்கப்பட்டன. அவர்கள் அப்பிராந்தியங்களில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அரசன் இறந்த பின்னர் அப்பதவியானது மாயரட்டையில் ‘மாபா’ பதவி வகித்த இளவரசனுக்கே வழங்கப்பட்டது. உறுகுணுரட்டையிலிருந்து ‘ஏபா’ பதவி வகித்த இளவரசன் ‘மாபா’

பதவிக்கு அமர்த்தப்படுவான். சட்ட ரீதியான பட்டத்து இராணியின் பிள்ளைகளுக்கு மட்டுமே அரசுரிமை உரித்தாக விளங்கியது.

**அரச அதிகாரிகள்**

அரசனின் ஆட்சி நிர்வாகத்தில் அவனுக்கு உதவியாக பல அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இப்பதவிகளுள் சேனாதிபதி எனும் பதவியே முக்கியம் வாய்ந்தது. எனவே மன்னனின் நெருங்கிய உதவியாளன் ஒருவனே சேனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டான். அவனுக்கு உதவியாகப் பல தளபதிகளும் நியமிக்கப்பட்டனர்.
ஐத்தக்காஹக, அசிக்காஹக, அமைச்சர், புரோகிதர், படகாரிக (பொருளாளர்), மஹலேனா (செயலாளர்), வெதனா எனும் பல பதவிகளை வகித்தோரும் அரசவையில் காணப்பட்டனர். இவர்கள் அனைவரினதும் ஆலோசனைப்படியே மன்னன் தனது ஆட்சி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தான். பிற்காலத்தில் 'வேலைக்கார படை' எனும் கூலிப்படையினரையும் போர் நடிவடிக்கைகளின் போது அரசர்கள் ஈடுபடுத்தியுள்ளனர்.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிக நிர்வாகத்தில் பணியாற்றிய அரச அதிகாரிகளின் பதவிப்பெயர்கள், அவர்களுக்குரிய கடமைகள் என்பவற்றை அட்டவணைப் படுத்துக.*

## பிரதேச நிர்வாகம்:-

மத்திய ஆட்சி நிலையமான இராசரட்டை தவிர நிர்வாக நடவடிக்கையினை இலகுபடுத்தும் வகையில் நாடு பின்வருமாறு 4 பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

- ★ உத்தர பஸ்ஸ (வடக்கு)
- ★ தக்கிண பஸ்ஸ (தெற்கு)
- ★ பாச்சீன பஸ்ஸ (கிழக்கு)
- ★ பஸ்சிம பஸ்ஸ (மேற்கு)


அனுராதபுரக் காலத்தின் இறுதிப் பகுதியில் இராசரட்டை, உருகுணுரட்டை, மலையரட்டை, தக்கிணதேசம் என்று நாடு பல நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் உறுகுணுரட்டைக்குரியதாக விளங்கின.

பொலன்னறுவைக் காலத்தின் போது இராசரட்டை, தக்கிண தேசம், தொலஸ்தஹஸ் ரட்டை, அட்டதஹஸ் ரட்டை எனும் நான்கு அலகுகளாக நாடு காணப்பட்டது.

ஆரம்ப காலத்தில் யாழ் குடா நாடு நாகதீபம் எனும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. வசப மன்னனின் காலத்தில் ‘இஸிகிரி’ எனும் அமைச்சர் வட பகுதிக்கான பிரதேச ஆட்சியாளராக செயற்பட்டார் என்று குறிப்பிடப்படுகின்றது.

### கிராம நிர்வாகம்:-

பண்டுகாபய மன்னன் காலந்தொட்டு பொலன்னறுவைக்காலத்தின் முடிவு வரை கிராம நிர்வாகம் முறையாக மேற்கொள்ளப்பட்டதாக மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன. பண்டுகாபய மன்னன் நாடு முழுதும் இருந்த கிராமங்களுக்கு நிர்வாக எல்லைகளை வகுத்ததாக வம்சக் கதை நூல்கள் குறிப்பிடுகின்றன. கிராமங்கள் நிர்வாகக் கட்டமைப்பின் சிறிய அலகாகவும் அதே வேளை முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்பட்டது. கிராமத்தில் சமாதானம், நீதி என்பவற்றைப் பேணுவதற்காக கிராமசபை என்னும் அமைப்புமுறை காணப்பட்டது. அதன் தலைவர் கமிக, பருமக, கிராம போஜக எனும் பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றார்.




தேசப்படம் :
*4.2 பிரதேச நிர்வாக அலகுகள்*

### கிராமத் தலைவருக்குரிய கடமைகள்:-

- ★ கிராமத்தில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல்
- ★ கிராமவாசிகளின் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ★ கிராமத்தில் வரி சேகரித்தல்
- ★ கிராமவாசிகளுடன் நல்லுறவைப் பேணும் வகையில் நடந்துகொள்ளுதல்
- ★ கிராம நிர்வாக விடயங்கள் தொடர்பாக அரசனுக்கு பொறுப்புச் சொல்ல கடமைப்படுதல்.
- ★ கிராமத்தில் நீதியை நிலைநாட்டல்.


கிராம ஆட்சியில் ஜனநாயக இயல்புகள் தெளிவாகத் தெரிகின்ற அம்சமாகும். பல்வேறு சேவைகளிலும் ஈடுபட்டோருக்கு கிராமங்களையும், நிலங்களையும் மன்னன் வழங்கினான். குற்றவாளிகள் கிராமங்களில் தலைமறைவாக இருப்பின் அவர்களைப் பிடித்து ஒப்படைப்பது கிராமவாசிகளின் கடமையாகக் காணப்பட்டது. மேலும் விகாரைகளுக்கும் மன்னன் நிலபுலன்களை தானஞ் செய்தான்.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தின் நிர்வாக நடவடிக்கைகளைப் பரவலாக்கியமை அரசனின் ஆட்சி நடவடிக்கைகளை இலகுவாக்கியது என்பது பற்றி சமூக விஞ்ஞான சங்கத்தில் ஆற்றப்பட வேண்டிய உரை ஒன்றுக்கான தகவல்களை அறிக்கைப்படுத்துக.*

## நீர்வள நாகரிகத்தின் பொருளாதார அமைப்பு

அனுராதபுரத்தின் ஆரம்ப காலந்தொட்டு நீர்வளநாகரிகம் நிலவிய காலம் முழுதும் படிப்படியாக வளர்ச்சி கண்டு, துரித முன்னேற்றம் அடைந்த நீர்ப்பாசனத் துறையானது பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை அம்சமாக விளங்கியது. அடிப்படையில் நீர்வள நாகரிக பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையாக அமைந்தது விவசாயமாகும். விவசாயத்திலும் நெற்செய்கையே முதலிடம் பெற்றது. ஏனெனில் இன்று போலவே அன்றும் நாட்டு மக்களின் பிரதான உணவாகக் காணப்பட்டது நெல்லரிசிச் சோறாகும். எனவே நெல்லைப் பெற்றுக்கொள்வதற்காக வருடத்தில் இரண்டு அல்லது மூன்று போகங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறிமேகவர்ண மன்னனின் காலத்துக்குரிய தோணிகல கல்வெட்டில் ‘பிட்டடஹஸ’(பெரும் போகம்), ‘மதஹஸ’ (சிறுபோகம்),‘ அகலஹஸ’ (இடைப் போகம்) எனும் மூன்று போகங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது மேற்படி கூற்றை உறுதிப்படுத்துகின்றது. ஆண்டு முழுவதும் குளம் மூலம் நீர்ப்பாசனம் பெற்றுக்கொள்ளக்கூடிய பகுதிகளில் மாத்திரம் மூன்று போகம் செய்கை பண்ணப்பட்டதுடன் நீர்வளநாகரிகத்துக்குரிய நிலப்பிரதேசம் யாவும் பசுமையான வயல் வெளியாகவே காட்சியளித்தது.



*தேசப்படம் 4.3 பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையின் நிர்வாக அலகுகள்*

நெற்செய்கைக்குத் தேவையான உழைப்பு, ‘அ(ந்)த’ முறை (பிறரின் நிலத்தில் விவசாயம் செய்தல்),‘ அத்தம்’முறை (சிரமப் பரிமாற்றம்), கூலி கொடுக்கும் முறை எனும் அடிப்படைகளில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நெல் தவிர கடுகு, தினை, பயறு, எள், கரும்பு, பருத்தி, மா, தென்னை முதலிய பயிர்களும் பயிரிடப்பட்டன. சேனைப் பயிர்ச்செய்கையும் அக்காலத்தில் முக்கிய இடம் வகித்தது. உலர் வலயமும் நாட்டின் உள்ளார்ந்த பிரதேசங்களும் சேனைப்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டன.

கரைநெல், உளுந்து,பயறு, சாமை முதலிய தானியங்களும் கத்தரிக்காய், சுரைக்காய், வெள்ளரிக்காய், பூசனிக்காய் முதலிய காய்கறி வகைகளும் சேனைகளில் பயிரிடப்பட்டன.

நெசவுத் தொழிலுக்குத் தேவையான பருத்தி வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டதுடன் கரும்புச் செய்கையும் முன்னேற்றங் கண்டிருந்தது. விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள் தவிர வீட்டுத் தோட்டங்களில் பலா, தென்னை, மா முதலிய மரங்களும் வளர்க்கப்பட்டன. மலைப்பாங்கான பகுதிகளில் இஞ்சி, மஞ்சள், மிளகு முதலியவற்றுடன் கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டன.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் விவசாய நடவடிக்கைகளைச் சித்திரிக்கும் வகையில் படங்களுடனான அறிக்கையொன்றைத் தயாரிக்குக.*

## கைத்தொழில்

நீர்வள நாகரிகத்தில் நிலவிய சுயதேவைப்பூர்த்தியான ஒரு பொருளாதார முறையின் கீழ் விவசாய நடவடிக்கைகளுடன் இணைந்ததான கைத்தொழில்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. நெற்பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட கலப்பை, நுகத்தடி, மட்டப்பலகை, கத்தி, அரிவாள்,மண்வெட்டி எனும் உபகரணங்கள் பற்றி 'அட்டுவா' எனும் கதைகளிலும் 'சத்தர்மரத்னாவலிய' எனும் நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே அக்காலத்தில் தச்சுத் தொழிலும் உலோகக் கைத்தொழிலும் வளர்ச்சி கண்டிருந்ததாகக் கருதமுடியும். படை வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள், அலங்காரமான புத்தர் சிலைகள், தெய்வச்சிலைகள், விளக்குகள் என்பன உலோகக் கைத்தொழிலை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்திப் பஞ்சிலிருந்து நூல்நூற்றல், புடைவை நெய்தல் எனும் நெசவுக் கைத்தொழிலும் மட்பாண்டத் கைத்தொழிலும் உயர்மட்டத்தில் காணப்பட்டதாக அறிய முடிகின்றது. அதே போன்று கரும்புப் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்டு கருப்பஞ்சாறு பிழியும் இயந்திரம் மற்றும் கருப்பம் பாணியிலிருந்து கருப்பட்டி (சர்க்கரை) தயாரித்தல் என்பனபற்றியும் இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது.

கட்டட நிர்மாணங்களின்போது கற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளமையால் அவை தொடர்பான கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

இரத்தினக்கற்களால் ஆபரணங்கள் தயாரிக்கப்பட்டதிலிருந்து சுரங்கக்கைத்தொழிலும் வளர்ச்சி கண்டிருந்ததாகக் கருதலாம்.

அக்காலத்தில் பல்வேறு கலைகளும் பல்வேறு தராதரங்களின் அடிப்படையில் அமைப்பு ரீதியில் மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. உயர்தரத்தில் அமைந்த கைத்தொழில் நிர்மாணங்கள் அரசனால் பாராட்டப்பட்டதுடன் அக்கலைஞர்களுக்குப் பரிசுகளும் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் நிலவிய கைத்தொழில்கள் பற்றி மூலாதாரங்களில் காணப்படும் விடயங்களைத் திரட்டி கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.*

| *கைத்தொழில்* | *விபரமடங்கியுள்ள மூலாதாரம்* | *மூலாதாரத்தில் அடங்கியுள்ள விடயங்கள்* |
|---|---|---|
| | | |

## வர்த்தகம்

நீர்வள நாகரிகப் பொருளாதார அமைப்பின் மற்றுமொரு அம்சமாக வர்த்தகம் காணப்பட்டது. இவ்வர்த்தகமானது உள்நாட்டில் நிகழ்ந்ததைப் போன்றே வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

### உள்நாட்டு வர்த்தகம்:-

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் வைத்து விற்பனை செய்யப்படும் முறையானது ஆரம்பகாலத்திலிருந்தே நிலவி வந்துள்ளமையை அறிய முடிகின்றது. அது பெரும்பாலும் பண்டமாற்று அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'கஹவணு', 'மஸ்ஸ' (மசுரன்) எனும் நாணயங்களின் பெயர்களும் இடம் பெறுவதனால் பணப்புழக்கமும் ஓரளவுக்கு இருந்துள்ளமை தெரிய வருகின்றது. உள்நாட்டில் காணப்பட்ட சந்தைகள் 'பதிய' எனும் பெயரால் குறிப்பிடப்பட்டன. மகியங்கனைக்கு அருகில் அமைந்திருந்த 'ஹோபிட்டி-கமுவ பதிய' இதற்குச் சிறந்த உதாரணமாகும். வர்த்தக சந்தை நிர்வாகிகள் 'பதிலத்தன்' எனும் பெயரால் அழைக்கப்பட்டனர். வர்த்தக நகரங்கள், 'நிகம', நியமத்தன', நியம்கம்' எனும் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. உள்நாட்டு வர்த்தகத்தில் உப்பு, இஞ்சி,

ஆடை, ஆபரணங்கள், நறுமணப்பொருட்கள் என்பவற்றுடன் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட விலையுயர்ந்த துணிவகைகள், பீங்கான் பொருட்கள் என்பன இடம்பிடித்திருந்தன. இவை தவிர வெளிநாட்டு வர்த்தகத்துக்கான பொருட்களை உள்நாட்டில் கொள்வனவு செய்தலும் வியாபாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தூரப்பிரதேசக் கிராமங்களில் பொருட்களைக் 'காவு'களில் கொண்டு சென்று விற்பனை செய்யும் வியாபாரிகளும் காணப்பட்டனர். உள்நாட்டு வியாபாரம் தொடர்பாக வர்த்தக சபைகள் உருவாக்கப்பட்டிருந்ததாக பதுளை தூண் கல்வெட்டின் மூலம் தெரிய வருகின்றது. இதன்படி சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட வர்த்தக முறையொன்று நிலவியதாக அறியமுடிகின்றது.

வியாபாரச் சந்தைகளுக்கான வரிகளை விதித்தல், சந்தைகளில் நிகழும் ஊழல்களைத் தேடியறிதல் முதலிய நடவடிக்கைகள் அரசனால் மேற்கொள்ளப்பட்டதாக பதுளை தூண் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. உப்பு, முத்து, இரத்தினம் மற்றும் யானை வர்த்தகம் தொடர்பாக அரசன் தனியுரிமை பெற்றிருந்தான்.

### வெளிநாட்டு வர்த்தகம்

பிரதான நதிகள் கடலில் கலக்கும் இடங்களில் காணப்பட்ட ஓடத்துறைகளை அடிப்படையாகக் கொண்டு வர்த்தகத்துறைமுகங்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. அவை 'பட்டுன்கம்' (பட்டணம்) எனும் பெயரால் குறிப்பிடப்பட்டன. மகாதித்த, சூகரதித்த, ஜம்புகோளதித்த, கோகண்ணதித்த என்பன அவ்வாறான பட்டணங்களிற் சிலவாகும். மகாதித்த துறைமுகப் பகுதியில் வெளிநாட்டு நாணயங்களும், சீன மட்பாண்டங்களின் சிதைவுகளும் தொல்பொருட்களாகக் கிடைத்ததைக் கொண்டு வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்திருந்ததை அறியமுடிகின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வர்த்தகப்பொருட்களில் யானை, யானைத்தந்தம், முத்து, மாணிக்கம், சங்கு, கடலாமை ஓடு, பருத்தித்துணி என்பன பிரதான இடம் பெற்றன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுள் தங்கம், வெள்ளி, செப்பு, வெண்கலம், கண்ணாடி, பீங்கான் பொருட்கள், உயர்ரகத்துணிகள், குதிரைகள் என்பன பிரதான இடம்பெற்றன.

இந்தியா, கிரேக்கம், உரோம், சீனா, அரேபியா ஆகிய நாடுகளுடன் இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தை மேற்கொண்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அதன்படி நீர்வள நாகரிகத்தின் ஆரம்பத்தில் நிலவிய வெளிநாட்டு வர்த்தகம் பொலன்னறுவைக்காலத்தில் மிகவும் வளர்ச்சி கண்டிருந்தது.

**செயற்பாடு :**

★ *"நீர்வள நாகரிகத்தின் வர்த்தக நடிவடிக்கைகள்" எனும் தலைப்பில் அறிக்கை ஒன்று தயாரிக்க.*

## சமயமும் கலாசாரமும்

### பௌத்த சமயம்

அசோக மன்னனின் தர்மதூதுக்குழுக்களை அனுப்பும் திட்டத்தினாலும் தேவநம்பிய திஸ்ஸ மன்னனுடன் அசோக மன்னன் நட்புறவு கொண்டிருந்ததன் விளைவாகவும் மகிந்த தேரரால் இலங்கைக்கு பௌத்த சமயம் கொண்டு வரப்பட்டது. அன்றைய ஆட்சியாளனான திஸ்ஸ மன்னனால் பௌத்த சமயம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையானது இலங்கையில் பௌத்த சமயத்தின் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து அரச குடும்பத்தினரும் அரச பிரதானிகளும் பௌத்த சமயத்தைத் தழுவினர். அவர்களைப் பின்பற்றி பொதுமக்களும் பௌத்த சமயத்தை ஏற்றுக் கொண்டமை அதன் பரவலுக்குக் காரணமாயமைந்தது.

மகிந்த தேரர் தலைமையிலான பிக்குமாரை மிகிந்தலையிலிருந்து அனுராதபுரத்துக்கு எழுந்தருளச் செய்தல், அவர்களுக்கு 'மகாமெவ்னா' என்னும் மகாமேக நந்தவனத்தை அர்ப்பணஞ் செய்தமை எனும் நிகழ்வுகளின் பின்னர் அங்கு மகாவிகாரையை அமைப்பதற்கான எல்லை குறிக்கப்பட்டது. பிற்காலத்தில் மகாவிகாரை தேரவாத பௌத்த சமயத்தின் மத்திய நிலையமாகத் திகழ்ந்தது.

மக்களின் வணக்க வழிபாட்டுக்காக தேவநம்பிய திஸ்ஸ மன்னன் புத்தர் பெருமானின் புனித தாதுக்களைப் பிரதிஷ்டை செய்து தூபராமை விகாரையைக் கட்டினான். இது இலங்கை வரலாற்றில் கட்டப்பட்ட முதல் தூபியாகக் கொள்ளப்படுகிறது.

மகாவிகாரையினதும் தேரவாத பௌத்த சமயத்தினதும் பொற்காலமாகக் கருதப்படுவது துட்டகைமுனு மன்னனின் ஆட்சிக்காலமாகும். ருவன்வெலிசாய, மிரிசவெட்டிய முதலிய விகாரைகளை அமைப்பதற்கு இம்மன்னனே அனுசரணை வழங்கினான். அத்துடன் பௌத்த பிக்குமார் வசிப்பதற்காக ஒன்பது மாடிகளைக் கொண்ட'லோவமஹாபாய' எனும் ஆயிரங்கால் மண்டபத்தையும் துட்டகைமுனு மன்னனே நிர்மாணித்ததாக மூலதாரங்கள் கூறுகின்றன.

பௌத்த சமயத்தின் வளர்ச்சியைப் போலவே அச்சமயத்தைப் பாதுகாப்பதற்கும் சிங்கள மன்னர்கள் நடிவடிக்கைகளை மேற்கொண்டனர். வாய்மொழிக்கதையாக அதுவரை காலமும் செவிவழியாகப் பேணப்பட்டு வந்த திரிபிடகம் மாத்தளை அலுவிகாரையில் வைத்து நூல்வடிவில் கொடுக்கப்பட்டது. வலகம்பா மன்னனின் காலத்தில் நிகழ்ந்த இந்த பாரிய பணிக்கு தலைமைத்துவம் வழங்கியவர் ஒரு குடியிருப்புக்குப் பொறுப்பான பிரதானியாவார். மகாநாம மன்னனின் ஆட்சிக்காலத்தில் சிஹல 'அட்டகதா' எனும் சமயக் கதைகளை பாளி மொழியில் மொழிபெயர்க்கும் பணியானது புத்தகோச தேரரின் தலைமையில் நிகழ்ந்தமையானது சமயத்தைப் பாதுகாப்பதற்கு அரச அனுசரணை கிடைக்கப்பெற்ற மற்றுமொரு சந்தர்ப்பமாகும்.

பௌத்த சமயத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களின் தகவல்களைத் தேடியறிவோம்.

வலகம்பா மன்னன் அனுராதபுரத்தைக் கைவிட்டு மலைநாட்டுக்குத் தப்பியோடி, தமிழ் ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடிப்பதற்காகப் படை திரட்டினான். அக்காலத்தில் 'குப்பிகலதிஸ்ஸ' எனும் தேரர் மன்னனுக்கு உதவியாக இருந்தார். அதற்குப் பிரதியுபகாரமாக மன்னன் அபயகிரி விகாரையை அமைத்து அத்தேரருக்கு தானஞ் செய்தான். இதனால் கோபமடைந்த மகாவிகாரை பிக்குகள், பொதுமக்களுடன் நெருக்கமான உறவு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் அவரை மகாவிகாரையிலிருந்து வெளியேற்றினர். எனவே 500 பிக்குகளுடன் குப்பிகலதிஸ்ஸ தேரர் அபயகிரி விகாரையை வாசஸ்தலமாக்கிக் கொண்டார். இந்நிகழ்வினால் பௌத்த பிக்குகளிடையே பேதமேற்பட்டதுடன் அபயகிரிவிகாரை தனியானதொரு பௌத்த மத்திய நிலையமாக வளர்ச்சி கண்டது. எனவே பௌத்த சமயத்தில் 'நிகாய' எனும் பிரிவுகள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. ஜேத்தவனாராம விகாரையும் தேரவாதக் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. மேலும் அக்காலகட்டத்தில் இந்தியாவில் வளர்ச்சி கண்ட மகாயான பௌத்த சமயமும் இலங்கையினுள் வேகமாகப் ஊடுருவிப் பரவியது.

வோஹாரிக திஸ்ஸ மன்னனின் ஆட்சிக் காலத்தில் வைதுல்யவாதி எனும் பௌத்த சமயப்பிரிவு பற்றிய சர்ச்சை எழுந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோதாபய மன்னன், 'வைதுல்யவாதி' பிக்குமார்களை நாட்டை விட்டு வெளியேற்றினான் என்பதிலிருந்து தேரவாத பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதற்காக அரச அனுசரணை கிடைக்கப் பெற்றுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆயினும் மகாசேன மன்னன் ஆட்சிபீடமேறிய பின்னர் மீண்டும் வைதுல்ய வாதம் தலைதூக்கியமையை அறிய முடிகின்றது. சோழ நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த சங்கமித்திர தேரரின் தூண்டுதலால் மகாசேன மன்னன் மகாவிகாரைக்கு எதிராகச் செயற்பட்டான். அதனையடுத்து இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் மகாயானக் கருத்துக்கள் பரவியதுடன் அப்பிரிவுக்குரிய விகாரைகளும் தோற்றம் பெறலாயிற்று. புதுறுவகல எனுமிடத்தில் காணப்படும் போதிசத்துவர் உருவம் இதற்குத் தக்கசான்றாகும். மகாயான பௌத்த சமயப்பிரிவினரின் நம்பிக்கை கொள்ளும் 'அவலோகிதேஸ்வர' போதிசத்துவரின் உருவம் குஸ்டராஜகல, புதுறுவகல எனுமிடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராசரட்டையிலும் ஏனைய பிரதேசங்களிலும் மகாயான பௌத்தம் பரவிய போதிலும், பொதுவாக இலங்கையில் தேரவாத பௌத்தமே முக்கியத்துவம் பெற்று வந்துள்ளமையை அறிய முடிகின்றது. இன்று இலங்கையில் எஞ்சியிருக்கின்ற பௌத்த இலக்கிய மூலாதாரங்கள் அனைத்தும் தேரவாத பௌத்த நூல்களேயாகும்.

பொலன்னறுவைக் காலத்திலும் பௌத்த சமயத்திற்கு அரச அனுசரணை கிடைக்கப்பெற்றுள்ளமையை வம்சக்கதைகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இக்காலகட்டத்திலும் மகாவிகாரை, அபயகிரி, ஜேத்தவனாராம எனும்

மூன்று பௌத்த நிலையங்கள் காணப்பட்டன. பௌத்த பிக்குமாரிடையே நிலவிய இவ்வபிப்பிராய பேதங்களை இல்லாதொழிக்கும் நோக்குடன் பௌத்த சங்கத்தை மறுசீரமைப்பதற்கு பாரிய பணியை மகாபராக்கிரமபாகு மன்னன் முன்னெடுத்தமையும் அறியக்கூடியதாயுள்ளது. அதற்காக அவன், திம்புலாகல மகா காசியப்பப தேரரின் தலைமையில் ஒரு நீதிமன்ற சபையை அமைத்தான். அதில் ஒவ்வொரு நிகாயப்பிரிவு பிக்குமாரினதும் ஒழுக்கம், ஒழுக்கயீனம் பற்றி விசாரணை செய்யப்பட்டது. மகாவம்சம் குறிப்பிடுவதன்படி அபயகிரி மற்றும் ஜேத்தவன பிக்குமார் ஒழுக்கயீனர்களாகக் காணப்பட்டனர். அவ்வாறு ஒழுக்கமற்ற பிக்குமாரின் காவியுடை களையப்பட்டு அவர்களுக்கு அரசாங்கத்துறையில் பதவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இன்னும் சில பிக்குமார் 'சாமனேரர்' எனும் நிலைக்கு கீழிறக்கப்பட்டனர். இவ்வாறு கி.பி 1165 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நிகாயகளுக்கிடையிலான ஒற்றுமை காரணமாக பௌத்த சமயப் பிரிவினைகளுக்கு இலங்கையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதன் பின்னர் பௌத்த பிக்குமார் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் 'பொலன்னறுவ கதிகாவத' எனும் ஒழுக்கநெறிக்கோவையாக கல்விகாரையில் ஒரு சுவர்க் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டது.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் பௌத்த சமயத்துக்கு அரச அனுசரணை கிடைத்த சந்தர்ப்பங்களை அட்டவணைப்படுத்துக.*

## இந்து சமயமும் ஏனைய சமயங்களும்:-

இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகப் படுத்தப்படமுன்னர் மக்கள் கற்களையும் மரங்களையும் வணங்கி வந்ததுடன் நெருப்பு, மழை, காற்று, முதலிய இயற்கைப் பொருட்களுக்குப் பூஜைகள் செய்துவந்தனர். பேய்களையும், நாகத்தையும் வழிபட்டமை புராதன இலங்கையரிடம் காணப்பட்டது போல இன்றும் காணப்படு கின்றது.



*உரு 4.7 இந்து சமய உற்சவமொன்று*

மகிந்த தேரர் இலங்கைக்கு வந்த காலத்தில் இங்கு பிராமணசமயம் (பிரமன், இந்திரன், சூரியன் முதலிய கடவுளரை வணங்குதல்) காணப்பட்டதுடன் வைரவர், சமன் முதலிய கடவுளருக்கும் பூஜைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நம்பிக்கையைக் கடைப்பிடிப்பதற்கு எவ்விதத் தடையுமின்மையால் சில சமூகப் பிரிவினரிடம் பிரம்மணீய சமயமும், தெய்வங்களை வழிபடும் முறையும் காணப்பட்டன. பண்டுகாபயன், வலகம்பா, மகாசேன மன்னர்களின் காலத்திற்குரிய பிரம்மணீய சமயம் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குடியேற்றக் குழுவினராகவும் ஆக்கிரமிப்பாளராகவும் இலங்கைக்கு அடிக்கடி வந்த இந்தியர், கரையோரத் துறைமுகப் பகுதிகளில் இந்துக் கோயில்களைக் கட்டினர். மகாசேன மன்னன் அவ்வாறான கோயில்கள் பலவற்றையும் அழித்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அனுராதபுரக்காலத்தின் இறுதிப்பகுதியில் இங்கு கட்டப்பட்ட சில இந்துக் கோயில்களின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மன்னார் (திருக்கேதீஸ்வரம்), திருகோணமலை (திருக்கோணேஸ்வரம்) போன்ற சிவாலயங்கள் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் மிகவும் பிரசித்தி பெற்ற தலங்களாகத் திகழ்ந்துள்ளமையை சுட்டிக் காட்டலாம். பொலன்னறுவை சோழராதிக்கத்தின் கீழ் வந்த பின்னர் அங்கும் பல சிவாலயங்கள் கட்டப்பட்டன.

பொலன்னறுவைக் கால சந்திரவட்டக் கல்லில் எருதின் உருவம் நீக்கப்பட்டமையானது இந்து சமயத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றது. இந்து சமயத்துடன் தொடர்பான வெண்கலச் சிலைகளும் பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்டுள்ளமையானது இந்து சமய செல்வாக்கை மேலும் தெளிவுபடுத்துகிறது. இக்காலப்பகுதிக்குரிய சிவன், கணபதி, விஷ்ணு சிலைகளுடன் பார்வதிதேவியின் சிலைகளும் கிடைத்துள்ளன.

## மக்களின் வாழ்க்கை முறை:-

பௌத்த சமயம் மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டமையால் மக்களிடையே சமாதான சகவாழ்வு கட்டியெழுப்பப்பட்டது. அக்காலத்தில் நிலவிய விவசாயப் பொருளாதாரத்துக்கேற்ப வாழ்க்கைக் கோலம் அமைந்திருந்தது. பௌத்த சமயத்தின் பரவலுடன் சகல மக்களும் ஓரே தரத்தைச் சேர்ந்த பொது சமூகமாகக் கருதப்பட்டதுடன் அங்கு பிக்கு, பிக்குணி, உபாசக (பக்தன்), உபாசிகா (பக்தை) எனும் பிரிவினர் காணப்பட்டனர். புத்தர் பெருமானின் போதனைக்கேற்ப சமாதான சகவாழ்வுடன் கூடிய சமூகமொன்று உருவானது.

அனுராதபுரக் காலத்தில் தந்தை வழிச் சமூகவமைப்பே காணப்பட்டது. ஆயினும் பெண்களுக்கு சுயமாக செயற்படுவதற்கான சுதந்திரம் காணப்பட்டது. புராதன சமூகத்தில் பல்வேறு விதமான சீவனோபாயக் கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகள், வியாபாரிகள், பொற்கொல்லர் எனும் தொழில்ரீதியானவர்களாக அவர்கள் காணப்பட்டனர். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் குலமுறையில் வேணர், நேசாதர், இரதகாரர், புக்குசர், சண்டாளர் எனும் ஐவகை சாதியினரும் பற்றிய தகவல்கள் கிடைத்த போதிலும் இந்தியாவைப் போன்று தீவிரமான சாதிப்பிரிவினை இங்கு காணப்படவில்லை. அதற்குக் காரணம் பௌத்த சமயத்தின் செல்வாக்காகும்.

அனுராதபுரக் காலத்தை விட பொலன்னறுவைக்கால சமூகவமைப்பு ஓரளவு மாற்றமுற்றது. தென்னிந்திய செல்வாக்கு காரணமாக சமூகம் பல வம்சங்களாகவும்

குலங்களாகவும் பிரிந்து காணப்பட்டது. அரச வம்சம், பிராமணவம்சம், வர்த்தக சமூகம், விவசாயசமூகம் என்று பிரதான நான்கு குலத்தினர் பொலன்னறுவைக்காலம் முதல் பரவலடைவதைக் காணமுடிகின்றது. திருமணத்தொடர்புகள் ஒரே குலத்தினரிடையே மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் மாற்றுக் குலத்தவரிடையேயும் திருமண உறவுகள் நிகழ்ந்துள்ளன.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைக்கோலம் பொலன்னறுவைக் காலத்தில் மிகவும் சிறப்பாகத் திகழ்ந்துள்ளமையை அறிய முடிகின்றது. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இக்காலத்தில் விவசாயம் தவிர்ந்த வேறு தொழில்களை சீவனோபாயமாக மேற்கொண்ட வகுப்பினரும் வாழ்ந்துள்ளனர்.

மேலும் இக்காலப்பகுதியில் பந்தாட்டம், நீர்விளையாட்டு, ஊஞ்சலாடுதல் முதலிய விளையாட்டுக்கள் சமூகத்தில் காணப்பட்டதாக இலக்கிய மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. குருகுலம் அல்லது பிரிவெனா எனும் கல்வி நிலையங்களும் காணப்பட்டன. பிக்கு மாணவர்களுக்குப் போன்றே பொது சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்புகள் காணப்பட்டன. பெண்களும் கூட இக்காலப்பகுதியில் கல்வியறிவைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையில் ஓய்வு நேரம் அதிகமாகக் கிடைத்தமையால் மக்கள் இலக்கியம் மற்றும் கலைகளின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர். எனவே புத்த சமயத்தையும் விவசாயத்தையும் பின்னணியாகக் கொண்ட கலாசார அமைப்பொன்று நீர்வளநாகரித்தில் தோன்றி வளர்ந்தது.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிக சமூகவலையமைப்பில் தெளிவாகக் காணப்பட்ட பண்புகளை அட்டவணைப்படுத்துக*

## கலைகளும் கட்டட நிர்மாணமும்

இலங்கையில் பௌத்த சமயத்தின் பரவலுடன் கலைகளும் வளர்ச்சி கண்டன. ஆரம்பத்தில் கற்குகைகளிலும் வன ஆரணியங்களிலும் வாழ்ந்த பௌத்த பிக்குகளுக்கு ஆராமைகள் அமைத்து தானஞ் செய்யப்பட்டது. பௌத்த மக்களின் வணக்க வழிபாட்டிற்காக விகாரைகளும், தூபிமனைகளும் அமைக்கப்பட்டமையால் கட்டடக்கலை இங்கு வளர்ச்சி கண்டது.

விகாரை நிர்மாணங்களில் இலங்கையின் முதல் படைப்பாக தூபாராம விளங்குகின்றது. காலப்போக்கில் ருவன்வெலிசாய, மிரிசவெட்டி, அபயகிரி, ஜேத்தவனாராம ஆகிய விகாரைகளும் கட்டப்பட்டன. விகாரைகளைக் கட்டும்போது

உறுதிவாய்ந்ததும் பலம் வாய்ந்ததுமான பரவலான அத்திவாரத்தை இடுதல், கோளவடிவிலான கோளாகாரகர்ப்பத்தை அமைத்தல் என்பன புராதன கட்டடக் கலைஞர்கள் கையாண்ட தொழினுட்ப அம்சங்களாகும். இதற்காக பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறைகளும் கேத்திரகணித அறிவும் மிகவும் உயர்மட்டத்தில் காணப்பட்டதை அறிய முடிகின்றது. விகாரையின் 'வாகல்கட' எனும் பகுதி மிகவும் அழகான செதுக்கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

## வட்டதாதுமனை (வட்டதாகெய)

சிறிய விகாரைகளைச் சுற்றி தூண்களை எழுப்பி வட்ட வடிவிலான கூரையை அமைத்து உருவாக்கப்படும் கட்டடங்கள் தூபிமனை அல்லது வட்டதாது மனை எனப்பட்டது. இதற்கு உதாரணமாக தூபராம மற்றும் மெதிரிகிரிய தாது கோபம் என்பவற்றைக் கூறலாம். மேலும் இத்தூண்கள் கருங்கல்லினால் அல்லது மரத்தினால் ஆனதுடன் அவை செதுக்கல் கலை மூலம் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

## ஆராமைக் கட்டடங்கள்:-

புத்த பிக்குகள் வசிப்பதற்காக ஆராமைகள் அமைக்கப்பட்டன. அனுராதபுரத்தில் காணப்படும் மகாவிகாரை, அபயகிரிவிகாரை, ஜேத்தவனாராம கட்டடத்தொகுதிகள் இதற்கு சிறந்த உதாரணமாகும். அத்துடன் துட்டகைமுனு மன்னன் 'லோவமகாபாய' எனும் ஒன்பது மாடிகளைக் கொண்ட ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டி அதனை பிக்குமார் வசிப்பதற்காக அர்ப்பணஞ் செய்தான் என்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போயமனை, போதிமனை, தானசாலை, தியான மண்டபம், மருத்துவசாலை என்பனவும் கட்டடக்கலையின் சிறந்த படைப்புக்களாகும்.

## சிலைகளும் செதுக்கல் கலையும்:-



*உரு 4.8 அனுராதபுரக்கால சந்திரவட்டக்கல்*



*உரு 4.9 பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கல்*

செதுக்கல் கலைப்படைப்புக்களுள் சந்திரவட்டக்கல், கொறவக்கல், காவற்கல் என்பன முக்கியம் பெறுகின்றன. சந்திரவட்டக்கல் என்பது அரைவட்ட வடிவிலான கருங்கல்லின் செதுக்கப்பட்ட ஒரு படிவரிசையின் முதல் படிக்கல்லாகும்.

மலர்ந்த தாமரைப் பூவின் பாதி உருவம் சந்திரவட்டக்கல்லின் நடுவே செதுக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றிவர பூங்கொடி உருவமும் அதனையடுத்து அன்னப்பறவைகளின் வரிசையொன்றும், அதனையடுத்து சிங்கம், யானை, குதிரை,




இலவச விநியோகத்திற்காக

எருது எனும் மிருகங்களின் வரிசையும் முடிவில் பூவிதழ் அல்லது தீச்சுடர் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இந்து மக்களின் வணக்கத்துக்குப் பாத்திரமான ஒரு மிருகமாக எருது கருதப்படுவதால் பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கல்லில் எருதின் உருவம் செதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


இசுறுமுனிய விகாரையில் காணப்படும் குதிரைத்தலையும் மனிதனும், இசுறுமுனிய காதலர் சோடி, நீராடும் யானைகள் என்பவற்றுடன் அங்கு காணப்படும் செதுக்கல் கலைப்படைப்புகள் உயர் தரத்திலான நிர்மாணங்களாக விளங்குகின்றன.



*உரு: 4.10 கொறவக்கல்*




*உரு: 4.11 காவற்கல்*



*உரு: 4.12 இசுறுமுனி காதலர் சோடி*



*உரு: 4.13 குதிரைத்தலையும் மனிதனும்.*



*உரு: 4.14 சமாதிச்சிலை*

அனுராதபுரக் காலத்திற்குரிய புத்தர் சிலைகளுள் அதிகளவில் காணப்படுவது அமர்ந்த நிலையில் உள்ள தியானச் சிலைகளாகும். புத்தர் பெருமானின் இரு கால்களும் ஒன்றுடனொன்று குறுக்காக மடித்து வைக்கப்பட்டு, இடது பாதம் வலது பாதத்தின் மேல் வைக்கப்பட்டு, இடது கைக்கு மேலாக வலது கையை மடியின் மீது வைத்து சாந்தமான உணர்ச்சி வெளிப்பாட்டுடன் தியானநிலையில் ஆசனத்தின் மேல் அமர்ந்திருக்கும் வடிவில் இச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அனுராதபுர ‘குட்டம் பொக்குன’ எனும் இரட்டைத்தடாகத்தின் அருகே காணப்படும் சமாதிச்சிலை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.



*உரு:4.15 கல்விகாரை சயனச்சிலை*



*உரு: 4.16 அவுக்கன நிற்கும் சிலை*

ஒரே நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கருங்கற் சிலைகளில் புத்தர் பெருமானிடம் காணப்பட்ட கருணை, அன்பு எனும் உயர் பண்புகளைக் காண முடிவது சிறப்பம்சமாகும்.

நிற்கும் சிலைக்கு உதாரணமாக கலாவாவிக்கு அண்மையில் காணப்படும் அவுக்கன சிலையைக் குறிப்பிடலாம். புத்தர் பெருமானின் பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் இச்சிலை வடிக்கப்பட்டுள்ளது. காவியுடையின் மடிப்புக் கோடுகளை கருங்கல்லில் கூட மிக நுட்பமான முறையில் அமைத்திருப்பதிலிருந்து அக்காலக்கலைஞர்களின் திறமையை நாமறிந்துகொள்ள முடிகின்றது.

கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள புத்தர்பெருமானின் உறக்க நிலையைக் காட்டும் சயனச் சிலைகளும் காணப்படுகின்றன. பொலன்னறுவை கல்விகாரையில் காணப்படும் சயனச்சிலை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

சஸ்ஸேறுவ, புதுறுவகல, மாளிகாவில முதலிய இடங்களில் காணப்படும் புத்தர் சிலைகளும் அக்காலத்தின் கலைப்படைப்புகளின் உயர் நிர்மாணப்பண்புகளை வெளிக்காட்டுகின்றன.



*உரு: 4.17 நடராஜர் சிலை*



*உரு: 4.18 முதலாம் இலக்க சிவன் கோயில்*



*உரு: 4.19 இரண்டாம் இலக்க சிவன் கோயில்*



இலவச விநியோகத்திற்காக

பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய கடவுள்களின் உருவங்கள் பல்வேறு உலோகங் களினாலும் வார்க்கப்பட்டுள்ளன. சிவன், விஷ்ணு பிள்ளையார் சிலைகள் அவற்றுள் முக்கியமானவை. இவை அக்காலகட்ட உலோகக் கைத்தொழில் வளர்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளன.

இந்து சமயக் கட்டடக்கலை பற்றியும் இக்காலகட்டத்துக்குரிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சோழர் கட்டடக்கலைப் பண்புகளுடன் கட்டப்பட்ட சிவாலயங்களை பொலன்னறுவையில் இன்றும் காணமுடிகின்றது.



*உரு: 4.20 நிஸ்ஸங்கலதா மண்டபம்*

பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட நிஸ்ஸங்கலதா மண்டபம் மிகவும் சிரேஷ்டமானதொரு படைப்பாகும். அரசவை மண்டபமாகத் திகழ்ந்த இக்கட்டடத்தில் சிம்மாசனம் கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிங்க உருவில் காணப்படுகின்றது. அரச அதிகாரிகளின் ஆசனங்களுக்குப்பின்னால் அமைந்த கற்றூண்களில் அவர்களின் பதவிப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அன்றைய கால அரசவையொன்றின் பண்புகளை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.



*உரு: 4.21 சத்மஹல் பிரசாதய (ஏழடுக்கு மாளிகை)*

பொலன்னறுவையில் காணப்படும் 'சத்மஹல் பிரசாதய' எனும் ஏழடுக்கு மாளிகையும் சிறந்ததொரு கட்டடக்கலைப் படைப்பாகும். இங்கு ஒவ்வொரு மாடிச் சுவர்களிலும் அரை வட்ட வடிவில் குடைந்தெடுக்கப்பட்ட சுவர்களில் தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன. இது பெரும்பாலும் ஒரு தூபியின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.



*உரு: 4.22 தாமரை வடிவத் தடாகம்*

அனுராதபுர காலத்தில் போன்றே பொலன்னறுவைக் காலத்திலும் கட்டடக்கலைஞர்கள் நகர நிர்மாணத்திலும் கவனஞ் செலுத்தியுள்ளனர். குளங்களிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் பொய்கைகளும் தடாகங்களும் மேற்படி நகரங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரத்தில் காணப்படும் 'குட்டம் பொய்கை' எனும் இரட்டைப் பொய்கையும் பொலன்னறுவையில் காணப்படும் 'நெலும் பொகுன' எனும் தாமரை வடிவிலான தடாகமும் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.



*உரு:4.23 குட்டம் பொய்கை (இரட்டைத் தடாகம்)*

கலைகளுள் ஓவியக்கலையும் முக்கிய இடம் வகித்தது. இலங்கையின் ஓவியங்களில் சிகிரியா ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவையாகும். கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் இவ்வோவியங்கள் சிகிரியாக்குன்றின் குழிவான சுவர்களில் வரையப்பட்டுள்ளன. தாமரை, அல்லி, செண்பகப்பூக்களைச் சூடியுள்ளவாறும் பூக்களைக் கைகளில் ஏந்தியுள்ளவாறுமான பெண்களைச் சித்திரிக்கும் இவ் ஓவியங்கள் காசியப்ப மன்னனின் காலத்தில் வரையப்பட்டவையாகும். இந்தியாவின் குப்தர் காலத்துக்குரிய அஜந்தா குகை ஓவியங்களைத் தழுவியே சிகிரியா ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதாக சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொலன்னறுவைக் காலத்துக்குரிய ஓவியங்களை லங்கா திலக சிலைமனை, திவங்க சிலைமனை என்பவற்றுள் காணலாம். லங்காதிலக சிலைமனையின் சுவர் முழுதும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததாக நம்பப்படுகின்றது. ஆயினும் இன்று ஒரு கதவு நிலையின் மேல் அரை வட்டத்தில் காணப்படும் ஓர் ஓவியம் மாத்திரமே எஞ்சியுள்ளது. அத்துடன் கல்விகாரையின் வித்தியாதரக் குகையில் காணப்படும் ஓவியமும் முக்கியம் வாய்ந்ததாகும்.

**செயற்பாடு :**

★ *நீர் வள நாகரிகத்தில் கட்டடக்கலை மற்றும் கலை நிர்மாணங்களின் படங்களை உள்ளடக்கும் வகையில் சிறு நூலொன்றைத் தயாரிக்கவும்.*

## கல்விநிலை:-

நீர்வள நாகரிகத்தில் இங்கு வாழ்ந்த பௌத்த துறவியர், துறவியரல்லாத பண்டிதர்களால் எழுதப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது இந்நாட்டின் கல்விநிலை உயர்மட்டத்தில் திகழ்ந்துள்ளமையை எம்மால் உணர முடிகின்றது. அக்காலத்தில் வாழ்ந்த பிள்ளைகள் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக குருகுலத்திற்கு அல்லது கல்விநிலையமொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கல்விநிலையங்களாகப் பன்சலைகளும் பிரிவெனாக்களும் காணப்பட்டன. துறவு நிலை மாணக்கருக்குப் போலவே பொது மாணக்கருக்கும் கல்விகற்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்டன. கற்றல் முறைகளாக ஆசிரியர் சொல்வதை செவிமடுத்தல் மற்றும் மனனஞ் செய்தல் என்பன காணப்பட்டன. ஆரம்பத்தில் மணலில் விரலால் எழுதப் பயிற்றுவித்து பின்னர் பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதப் பயிற்றுவிக்கப்பட்டது. இக்காலக்கல்வித்திட்டத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. கணிதம், தர்க்கவியல், இலக்கணம், வானியல், வில்வித்தை என்பன அவற்றுள் சிலவாகும். கல்வியைப் போதிக்கும் மொழிகளாக பாளி, சமஸ்கிருதம், சிங்களம் என்பன காணப்பட்டன.



இலவச விநியோகத்திற்காக

## மொழியும் இலக்கியமும்:-

பாளி இலக்கியம், சமஸ்கிருத இலக்கியம், சிங்கள இலக்கியம் என்பன இங்கு முக்கியத்துவம் பெற்றன. சிங்கள மொழியின் மூலமொழிகளான பாளி, சமஸ்கிருதம் எனும் மொழிகளைக் கற்பது கற்றோரிடம் பிரபலமடைந்திருந்தது.

### பாளி இலக்கியம்:-

புத்தகோச தேரரால் 'ஹெல' மொழியில் எழுதப்பட்ட 'அட்டுவா' எனும் நூல் பாளி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இத்தேரருடன் இன்னும் பல பண்டிதர்களும் இணைந்து எழுதிய 'அட்டகதா' எனும் இலக்கியமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புத்தகோச தேரரால் இன்னும் பல நூல்களும் பாளி மொழியில் எழுதப்பட்டுள்ளன. 'அட்டகதா' மற்றும் 'திரிபீடகம்' எனும் நூல்களை முழுமையாகக் கற்று புத்த சமயம் பற்றி சுருக்கமாக எழுதப்பட்ட நூல்களாக அப் பாளிநூல்கள் காணப்பட்டன.

### சமஸ்கிருத இலக்கியம்:-

சாராணர்த்த சங்கிரஹய, ஜானகிஹரண என்பன சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட நூல்களாகும். கி.பி 7 ஆம் நூற்றாண்டாகும் போது கீழைத்தேச நாடுகளின் தொடர்பு மொழியாகக் காணப்பட்டது 'சகு' எனும் மொழியாகும்.

### சிங்கள இலக்கியம்:-

புத்த சமயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் அதனை சிங்கள மக்களுக்கு இலகுவாகப் புரியவைப்பதற்காக 'ஹெலட்டுவா' எனும் பெயரில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. மகா அட்டுவா, மகாபச்சரி அட்டுவா, குறுந்தி அட்டுவா எனும் பெயர்களில் எழுதப்பட்ட இந்நூல்கள் சிங்கள இலக்கியத்தில் முக்கியம் பெறுகின்றன. ஆயினும் இந்நூல்களை இன்று காணமுடியாதுள்ளது.

ஐந்தாம் காசியப்ப மன்னனால் எழுதப்பட்ட 'தம்பியா அட்டுவா கற்றபதய' எனும் நூல், தம்மபதக் கதைகளில் வரும் கடினமான வசனங்களுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட விளக்கவுரையாகும். சிகவலந்த, சிகவலந்த வினிச எனும் இரு நூல்களும் ஹெல மொழியில் எழுதப்பட்டவையாகும். நான்காம் சேன மன்னனால் எழுதப்பட்ட 'சியபஸ்லகர' என்பதும் மற்றுமொரு முக்கிய நூலாகும். பபிரிய, கசுப்தொட்ட ஏபா முதலிய 12 மகா கவிகள் முதலாம் அக்போ மன்னனின் காலத்தில் வாழ்ந்ததாக 'நிகாய சங்கிரஹய' எனும் நூல் குறிப்பிடுவதிலிருந்து அக்காலகட்டத்தின் இலக்கிய வளர்ச்சியை அறிந்து கொள்ள முடியும். பொலன்னறுவைக்காலத்தில் எழுதப்பட்ட சசந்தாவத, முவதெவ்தாவத, அமாவதுற, புத்சரண, சிங்கள தூபவம்சம் எனும் நூல்களும் சிங்கள இலக்கியத்தினுள் அடங்கும்.

பொலன்னறுவைக்காலத்தில் புகழடைந்திருந்த உரைநடை இலக்கியமாக 'சன்ன' எனும் இலக்கிய வடிவம் காணப்பட்டது. அபிதம்மத்த சங்கிறஹ சன்னய, மேகதூத சன்னய, ஜானகிஹரண சன்னய, சசந்தா சன்னய முதலியன அவ்வாறான

நூல்களுட் சிலவாகும். இக்காலத்தில் ‘கற்றபதய’ எனும் விளக்கவுரை நூல்களும் எழுதப்பட்டன. அதாவது மகாபோதிவங்ச கற்றபதய , ஜாதக அட்டுவா கற்றபதய என்பன அவற்றுள் சிலவாகும்.

**செயற்பாடு :**

★ *நீர்வள நாகரிகத்தில் மொழி, இலக்கிய வளர்ச்சி காணப்பட்டமைக்கான உதாரணங்களை அட்டவணைப்படுத்துக.*

## வெளிநாட்டுத் தொடர்புகள்:-

இலங்கை வெளிநாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதில் அதன் அமைவிடம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அவ்வகையில் கீழ்வரும் விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

★ கீழைத்தேச, மேலைத்தேச கடல்மார்க்க பட்டுவீதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்திருந்தமை.

★ தென்மேல், வடகீழ் காற்றுக்குரிய நீரோட்டங்களுக்கு அருகில் இலங்கை அமைந்திருந்தமை.

★ இலங்கையைச் சுற்றிவர அமைந்திருந்த இயற்கைத் துறைமுகங்கள்

மேற்படி அம்சங்களின் செல்வாக்குக்குக் காரணமாக இலங்கையுடன் பல்வேறு நாடுகளும் பல்வேறு வகையில் தொடர்புகளை வைத்திருந்தன. கீழ்வரும் எண்ணக்கரு விளக்கப்படத்தின் மூலம் அவ்வாறான வெளிநாட்டுத் தொடர்புகளை அறிந்து கொள்வோம்.

**செயற்பாடு :**

★ *வரலாற்று மூலாதாரங்களைப் படித்து, நீர்வள நாகரிகம் நிலவிய காலப்பகுதியில் இலங்கையுடன் வெவ்வேறு விதங்களிலும் தொடர்புபட்ட நாடுகளையும் முறைகளையும் அட்டவணைப்படுத்துக. (எண்ணக்கரு விளக்கப்படத்தில் கூறப்பட்ட தகவல்களை விட மேலதிக தகவல்களைச் சேகரிக்கவும்.)*

## நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி

கி.மு 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இலங்கையில் நிலவிய நீர்வள நாகரிகமானது கி.பி 1215ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கலிங்க மாகனின் ஆக்கிரமிப்போடு வீழ்ச்சிக்குள்ளானது. அனுராதபுரம், பொலன்னறுவைப் பகுதிகளில் காணப்பட்ட விகாரைகளும் நீர்ப்பாசனத் தொகுதியும் அழிவுற்றன. நீர்ப்பாசன புனரமைப்பு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படாமையால்

வயல் நிலங்கள் பாழடைந்தன. உலர்வலயம் பெருங்காடாக மாறியது. சீரழிந்து போன நீர்ப்பாசனக் கட்டமைப்பை தொடர்ந்து வந்த மன்னர்களால் பேணமுடியாமற் போனது.

- வெளிநாட்டுத் தொடர்பு
  - அரசியல் தொடர்பு
    - குடிப்பெயர்வு → விஜயனும் தோழர்களும் முதற் கொண்டு வருகை தந்த குடியேற்றக் குழுக்கள்.
    - ஆக்கிரமிப்பு → வலகம்பா மன்னனின் காலத்தில் பூலகத்த குழுவினரின் ஆக்கிரமிப்பு. மித்சேன காலத்தில் பண்டு மற்றும் பாரிந்த ஆக்கிரமிப்பு.
    - திருமணம் → விஜயன் -மதுராபுரி இளவரசி.<br>பண்டுவாசுதேவன் -பக்தகச்சனா<br>நான்காம் மகிந்தன் கலிங்க இளவரசி
    - நட்பு → அசோகன் - தேவநம்பியதிஸ்ஸ<br>உரோம் குளோடியஸ் மன்னன்-<br>பாதிகாபய மன்னன்.
    - அரசியல் உதவி → அபயநாக மன்னன் / சிறிநாக மன்னன் / 3ம் அக்போ மன்னன் } தென்னிந்திய உதவியுடன் ஆட்சியமைத்தல்
    - சிறைக் கைதிகள் → கஜபாகு மன்னனின் தந்தையின் படை தென்னிந்தியாவில் கைதிகளாதல். மகாபராக்கிரமபாகு தமிழ் கைதிகளை கொண்டு வருதல்.
  - கலாசாரத் தொடர்பு
    - பௌத்தம் → கி.மு 247 இல் இங்கு பௌத்த சமயம் அறிமுகமாதல், பிக்குனி சாசனம் அமைக்கப்படுதல்.
    - இந்து → பொலன்னறுவையில் இந்துசமயக் கோயில்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
    - இஸ்லாம் → அரேபியத் தொடர்புகள் காரணமாக இலங்கையில் இஸ்லாமியர் குடியேறுதல்.
    - சிற்பம் → குப்த கலை மரபில் - சமாதிசிலைஅமராவதி
    - செதுக்கல் → செதுக்கல்- அவுக்கன சிலை
    - ஓவியம் → அஜந்தா ஓவியம் - சீகிரி ஓவியம்
    - எழுத்து → பிராமிய எழுத்து வடிவில் சிங்கள அரிச்சுவடி.

மாகனின் ஆக்கிரமிப்பின் பின்னர் இராசரட்டைப் பிரதேசம் முழுதும் அவனது ஆட்சியின் கீழ் வந்தமையால் அப்பிரதேச மக்கள் தமது இருப்பிடங்களைக் கைவிட்டு மலைநாட்டுக்கும், தென்பிரதேசத்துக்கும் புலம் பெயர்ந்தனர். பிக்குமாரின் ஒரு பகுதியினர் வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். எனவே இராசரட்டையின் பொருளாதாரக் கட்டமைவு சிதைவடைந்தது. சீரழிந்து போன நீர்ப்பாசனத் தொகுதிகள் குட்டைகளாகவும் வயல்நிலங்கள் காடுகளாகவும் மாற அங்கு மலேரியா முதலிய ஆட்கொல்லி நோய்கள் பரவின.

மேலும் பொலன்னறுவைக் காலத்தின் இறுதியில் அங்கு ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டமும் நாட்டின் மத்திய ஆட்சிமுறை பலவீனமடையக் காரணமாயமைந்தது. எனவே நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்தது.

## சாராம்சம்

- ★ *நீர்ப்பாசனத் துறையில் உயர் தொழினுட்பம் பிரயோகிக்கப்பட்டது.*
- ★ *நீர்ப்பாசனத் துறையின் வளர்ச்சிக்கு அரச அனுசரணை கிடைத்தது.*
- ★ *அரசனே நிர்வாகத்துறையின் தலைவராக இருந்ததுடன் முறையான ஆட்சிமுறை நிலவியது.*
- ★ *பிரதேச ஆட்சி, கிராமஆட்சி, என்ற வகையில் அதிகாரப்பரவலாக்கல் காணப்பட்டது.*
- ★ *பொருளாதார நடவடிக்கைகளில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றன.*
- ★ *இக்காலப் பகுதிகளில் பௌத்த சமயம் பிரதான சமயமாகக் காணப்பட்டதுடன் இந்து சமயமும் முக்கியத்துவம் பெற்றது.*
- ★ *அனுராதபுர காலத்தில் பரவிய மகாயான பௌத்த கருத்துக்கள் காரணமாக பௌத்த சமயத்தில் பிளவுகள் ஏற்பட வழிவகுக்கப்பட்டது.*
- ★ *தந்தை வழிச் சமூக அமைப்பு காணப்பட்டது.*
- ★ *பந்தாட்டம், ஊஞ்சலாட்டம், நீர்விளையாட்டு முதலிய விளையாட்டுகள் காணப்பட்டன.*
- ★ *கட்டடக்கலை, சிற்பக்கலை, செதுக்கல்கலை, ஓவியக்கலை என்பனவும் வளர்ச்சி கண்டிருந்தன.*
- ★ *பிரிவெனாக்களை அடிப்படையாகக்கொண்டு கல்விமுறை வளர்ச்சி கண்டது.*

★ சிங்கள, பாளி, சமஸ்கிருத மொழியிலான இலக்கியங்கள் வளர்ச்சி கண்டன.

★ வெளிநாடுகளுடன் அரசியல், கலாசாரத் தொடர்புகள் மேற்கொள்ளப் பட்டன.

★ வெளிநாட்டுத் தொடர்புகளை மேற்கொள்ள இலங்கையின் அமைவிடம் காரணமாயமைந்தது.

★ பலவீனமான மன்னர்கள், கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு என்பவற்றால் நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்தது.

**செயற்பாடு :**

★ நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயமைந்த கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட சீரழிவுகளைத் தேடியறிக.

**பயிற்சி :**

1. புராதன குளத்தொகுதியின் படத்தை வரைந்து அதன் பகுதிகளைப் பெயரிடுக?
2 நீர்ப்பாசனத் துறைக்கு சேவையாற்றிய இரு மன்னர்களைக் குறிப்பிட்டு அவர்களால் ஆற்றப்பட்ட மும்மூன்று சேவைகளைக் குறிப்பிடுக.
3 நீர்வள நாகரிகத்தின் மத்திய நிர்வாகம், பிரதேசநிர்வாகம், கிராமநிர்வாகம் என்பவற்றில் காணப்பட்ட மும்மூன்று பண்புகளைத் தருக
4 அக்காலத்தில் வளர்ச்சி கண்டிருந்த கைத்தொழில்களைப் பெயரிடுக.
5 நீர்வள நாகரிகம் சுயதேவைப்பூர்த்தியான ஒரு பொருளாதார முறையைக் கொண்டிருந்தது என்பதற்கான இரண்டு உதாரணங்களைத் தருக.
6 இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களை அட்டவணைப்படுத்துக.
7 இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளை அரசியல் தொடர்புகள், கலாசாரத் தொடர்புகள் என்றவாறு அட்டவணைப்படுத்துக.
8 நீர்வள நாகரிகத்தில் எழுதப்பட்ட பாளி, சிங்களமொழியிலான நூல்களைப் பட்டியல் இடுக.
9 நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் குறிப்பிடுக.